ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිසේෂමානது

අංක 2116/45 - 2019 මාර්තු මස 27 වැනි බදාදා - 2019.03.27

*2116/45 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/78* (xv).

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஏ. இபதுல் றவூப் ஹக்கீம் ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மேல், இக்கட்டளை மூலம், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றாகக் கருதப்படுகின்ற இலங்கை களனிப் பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும், (2018 ஆம் ஆண்டு மே மாதம் 01 ஆந் திகதிய 2069/ 16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும்) 2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதிய 1454/ 37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் நிரல்* I *இல் காணப்படுகின்ற "விஞ்ஞான பீடம்" என்னும் விடயத்திற்கு நேரொத்ததாகவுள்ள அவ்வட்டவணையின் நிரல்* II *இல் காணப்படுகின்ற "2. பௌதிகவியல் துறை" மற்றும் "4. தாவரவியல் துறை" என்னும் பதிவுகளுக்குப் பதிலாக முறையே, "2. பௌதிகவியல் மற்றும் இலத்திரனியல் துறை" மற்றும் "4. தாவர மற்றும் மூலக்கூற்று உயிரியல் துறை" என்னும் பதிவுகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்துகின்றேன்.*

ஏ. இபதுல் றவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2019, மாச்சு 25.*

*04-346*

1A - PG 4451 — 518 (2019/03) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.